அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 4/98 எனது இல: ஆ/111/3/2

அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு—07
1998.01. 27 ஆந் தேதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்!

## அரச உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ளும் கடன்களுக்கான ஆவணங்களை இரத்துச் செய்தல்.

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. பெற்றுக்கொள்ளப்பட்ட வீட்டுச் சொத்துக்கடன்களை முழுமையாக செலுத்தி முடிந்த பின் அவ்வத்தியாயத்தின் 11:15 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் படி சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரங்களின்படி சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்ய வேண்டியிருப்பினும் கடன் தொகை முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரும் அற்றோனி அதிகாரப் பத்திரங்களை இரத்துச் செய்யும் நடவடிக்கைகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக எனக்கு தெரியவந்துள்ளது.

03. ஆகையால் சொத்துக் கடன்களை பெற்று கடன் தொகையை முழுமையாக செலுத்தி முடித்த பின் அத்துடன் தொடர்பான அற்றோனி அதிகாரப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
செயலாளர்
அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சு

lone/w/2